**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலன் - வேளாண்மை நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள் - 2021 - 2022 - தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட / வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைத்தல் மற்றும் பனை மரங்கள் வளர்ப்பதை ஊக்குவித்தல் மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பனை மரங்களை வெட்ட நேரிட்டால் தக்க அனுமதி பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் [தோ.க.1(2)] துறை**

**அரசாணை (நிலை) எண்.238**

**நாள்: 12.09.2025**
**திருவள்ளுவர் ஆண்டு 2056**
**விசுவாவசு வருடம்,**
**ஆவணித் திங்கள் 27-ஆம் நாள்**

**படிக்கப்பட்டவை:**

1. மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேளாண்மை நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள் 2021 - 2022.
2. அரசாணை (நிலை) எண்.232 வேளாண்மை- உழவர் நலத் (தோக1(2) துறை, நாள். 07.12.2021.
3. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண். மா.தி 1 / 2341 / 2022, நாள். 22.07.2025.

*******

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை-உழவர் நலத் துறையின் நிதிநிலை அறிக்கையில், பிறவற்றுடன், பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்:-

*"தமிழர்களின் வாழ்வோடும், மொழியோடும், வளத்தோடும், ஒன்றுபட்டு, மழை ஈர்ப்பு மையம், நீர் நிலைகளின் காவலன் என்றும் அழைக்கப்படும் பனை மரத்தினை வேரோடு வெட்டி விற்கவும், செங்கல் சூளைகளுக்கு பயன்படுத்தும் செயலினை தடுக்க இவ்வரசால் உத்தரவு பிறப்பிக்கப்படும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பனை மரங்களை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி கட்டாயமாக்கப்படும்".*

2. இதனை தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பனை மரங்களை வெட்டுவதைத் தவிர்க்கவும், செங்கல் சூளைகளில் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும், அரசு உரிய உத்தரவுகளை பிறப்பிக்கும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பனை மரங்களை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி கட்டாயமாக்கப்படும். இதற்கு மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர்/உதவி மாவட்ட ஆட்சியர், சார் மாவட்ட ஆட்சியர், வேளாண் உதவி இயக்குநர் மற்றும் காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் உதவி இயக்குநர் ஆகியோருடன் கூடிய ஒரு குழு அமைக்கப்படும். மாவட்ட ஆட்சியர் வேறு உறுப்பினரையும் இக்குழுவுடன் தேவைக்கேற்ப சேர்த்துக் கொள்ளலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

3. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் பனைமரங்கள் வளர்ப்பதை ஊக்குவித்தல், பனை மரங்களின் முக்கியத்துவம் கருதி தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பனை மரங்களை வெட்ட நேரிட்டால் அதற்கான அனுமதி பெறுவதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவது தொடர்பான கருத்துருவினை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

4. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பனை மரங்களின் முக்கியத்துவம் மற்றும் பனை மரங்கள் வளர்ப்பதை ஊக்குவித்தல் தொடர்பாக பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

i. பனைமரம், அரசாணை நிலை எண்.746, வனங்கள் மற்றும் மீன் வளத்துறை, நாள்:28.06.1988-இன் படி தமிழ்நாட்டின் மாநில மரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ii. பனை மரத்தின் ஓலைகள் ஓலைச்சுவடிகளாகவும், மேற்கூரை அமைக்கவும், ஜாடிகள், பாய்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களான பனை வெல்லம், பனை சர்க்கரை, கள், பதநீர் மற்றும் நுங்கு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டு, தமிழர் வாழ்வின் ஒரு அங்கமாக விளங்குகிறது. மிகக் குறைந்த பராமரிப்பும், அதிக நோய் எதிர்ப்புச் சக்தியும் கொண்ட பனை குறைந்த தண்ணீரையே பயன்படுத்துகிறது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மைக்கு உதவுகிறது.

iii. கஜா புயல் தமிழ்நாட்டைத் தாக்கியபோது, பிற மரங்கள் பாதிக்கப்பட்டபோதிலும், பனை மரங்கள் பாதிக்கப்படாமல் கடலோரப் பகுதியில் நிலைத்து நின்றன. மேலும், மண் வளத்தை அதிகரிக்கவும், அரிப்பு ஏற்படக்கூடிய மண்ணை உறுதிப்படுத்தவும், நீர் சேமிப்பை அதிகரிக்கவும் அனைத்து வகையான மண்ணிற்கும் உகந்த மரமாக பனை விளங்குகிறது.

iv. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய 2019-2020 புள்ளியியல் கணக்கின்படி தமிழ்நாட்டில் 5 கோடி பனை மரங்கள் உள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கருத்துப்படி, நாட்டில் உள்ள 10 கோடி பனை மரங்களில் அதிகப்படியாக தமிழ்நாட்டில் மட்டும் 5 கோடி பனை மரங்கள் உள்ளன. ஏறத்தாழ 3 இலட்சம் விவசாய / தொழிலாளர் குடும்பங்கள் பனை மரத்தினை வாழ்வாதாரமாக நம்பி வாழ்கின்றனர். ஒவ்வொரு வருடமும் பல்வேறு நாடுகளுக்கு பனைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் பனைத் தொழிலானது அந்நியச்செலாவணி வருவாய்க்கு பங்களித்து வருகிறது.

v. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதை அரசு கவனத்தில் கொண்டு பனை மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் பொருட்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பனை மேம்பாட்டு இயக்கத்தினை செயல்படுத்தி வருகிறது.

vi. இத்திட்டத்தின் கீழ் பனை விதைகள், பனங்கன்றுகள் நடப்பட்டதுடன், தரமான பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கான கூடங்கள் அமைக்கப்பட்டும், பனை ஏறுபவர்கள் பாதுகாப்பாக ஏறுவதற்கான உபகரணங்கள் வழங்கியும், பனை மதிப்புக்கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும், கருவிகளும் அளிக்கப்பட்டும், மகளிருக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் கருவிகளும் வழங்கப்பட்டன.

vii. ஒரு பனை மரம் 15 மீட்டர் உயரத்தை அடைய 10 முதல் 15 ஆண்டுகள் ஆகும். முதிர்ச்சியடைந்த பிறகுதான் ஆண், பெண் என்று பிரித்தறிய முடியும். எனவே, பனை மரங்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பைப் பெறுவதற்கு 15 முதல் 20 ஆண்டுகள் தேவைப்படுகிறது. 150 ஆண்டுகள் ஆயுட்காலம் கொண்ட பனை மரத்தினை செங்கல் சூளை, தொழிற்சாலை பயன்பாட்டிற்காக அழித்து வருவதால் பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

viii. பனை மரத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மரத்தின் அனைத்துப் பாகங்களும் பயன்தரும் கற்பக விருட்ச மரமான பனை மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட/வட்டார அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும்.

5. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று பனைமரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு மரத்தின் அனைத்து பாகங்களும் பயன்படும் கற்பகவிருட்சமான பனை மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுவையும், வட்டார அளவில் கண்காணிப்புக் குழுவையும் அமைத்து அதனை செயல்படுத்திட அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது:-

**1. மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு**

| வ.எண் | அலுவலர்கள் விவரம் | பதவி |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2 | வருவாய் கோட்ட அலுவலர், சார் மாவட்ட ஆட்சியர் | கண்காணிப்பு தலைவர் |
| 3 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) | ஒருங்கிணைப்பு அலுவலர் |
| 4 | தோட்டக்கலை இணை இயக்குநர் (நீலகிரி மற்றும் கிருஷ்ணகிரி), தோட்டக்கலை துணை இயக்குநர் (இதர மாவட்டங்கள்) | செயல் உறுப்பினர் |
| 5 | வேளாண்மை இணை இயக்குநர் | உறுப்பினர் |
| 6 | கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் மாவட்ட அளவிலான அதிகாரி | உறுப்பினர் |

**2. வட்டார அளவிலான கண்காணிப்பு குழு**

| வ. எண் | அலுவலர்கள் விவரம் | பதவி |
|---|---|---|
| 1 | தோட்டக்கலை உதவி இயக்குநர் | கண்காணிப்பு தலைவர் |
| 2 | வேளாண்மை உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| 3 | தோட்டக்கலை அலுவலர் | செயல் உறுப்பினர் |
| 4 | வட்டாட்சியர் | உறுப்பினர் |

i. வட்டார அளவிலான குழு, வயல் ஆய்வு மேற்கொண்டு பனை மரங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு கிராம நிருவாக அலுவலர் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர் கூட்டாக கிராமம் வாரியாக இருப்புப் பதிவேடு பராமரித்திட வேண்டும். கணக்கிடப்படும் பனை மரங்களின் எண்ணிக்கையை பயிர்ச் சாகுபடி பதிவேட்டில் பதிவேற்றம் செய்யப்படுவதை வட்டார அளவிலான குழுவினால் உறுதி செய்யப்பட வேண்டும்.

ii. வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் பனை மரங்களை வளர்ப்பது மற்றும் பாதுகாப்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.

iii. வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுவானது வருவாய்க் கிராமங்களின் கீழ் உள்ள கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் குக்கிராமங்கள் வாரியாக பனை மரங்களின் எண்ணிக்கை, பரப்பு மற்றும் இதர விவரங்களை தங்களிடம் வைத்துக் கொண்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்திட வேண்டும்.

iv. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பனை மரங்களை வெட்ட நேரிட்டால் அதற்கு மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவின் அனுமதி அவசியம்.

6. பனை மரங்கள் வளர்ப்பதை ஊக்குவித்தல் மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பனை மரங்களை வெட்ட நேரிட்டால் அதற்கான அனுமதி பெறுவதற்காக பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது:-

**அ. கண்காணிப்புக் குழு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

- தமிழர்களின் மாண்போடும் வரலாற்றோடும் பிணைந்து காணப்படும் மாநில மரமாக திகழும் பனை மரத்தினை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி அவசியம் என்பது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- "கற்பக விருட்சம்" என்றழைக்கப்படும் பனை மரத்தின் அனைத்து பாகங்களும் ஏதோ ஒருவிதத்தில் பொருளாதார ரீதியாக விவசாயிகளுக்கு பயனளித்து வருகிறது என்பது குறித்து விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- மண் வளத்தைக் காப்பது மற்றும் மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பதில் இதன் முக்கியத்துவத்தை மக்களிடையே கொண்டு சேர்க்க வேண்டும்.
- தொடர்ச்சியாக ஏற்படும் தட்பவெப்பச் சூழ்நிலை, இராசயனப் பொருட்களின் பயன்பாட்டால் ஏற்படும் தீமைக்கு எதிராக பனை மரங்களின் தாங்கி வளரக் கூடிய தன்மை மற்றும் இதிலிருந்து கிடைக்கப்பெறும் ஊட்டச்சத்து மிகுந்த மருத்துவ குணம் மிக்க விளைபொருட்களின் ஆரோக்கியத்தை எடுத்துரைக்க வேண்டும்.
- தோட்டக்கலை உதவி அலுவலர், வேளாண்மை உதவி அலுவலர் மற்றும் கிராம நிருவாக அலுவலர் ஒருங்கிணைந்து செயல்பட்டு இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.
- கிராம ஊராட்சிகளில் பனை மரம் வெட்டுவதற்கு அனுமதி அவசியம் என்பதை எடுத்துரைக்கும் வகையில் கிராம அலுவலகங்கள் மற்றும் ஊராட்சி அலுவலகங்களில் கூட்டம் நடத்துதல், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், சுவரொட்டிகள், விளம்பரத் தட்டி / பதாகைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வாயிலாக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- கிராம சபைக் கூட்டத்தில் இது தொடர்பாக துறை அதிகாரிகள் இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து பனை மரங்களை பாதுகாத்தலிலும் தவிர்க்க இயலாத சூழ்நிலைகிளில் பனை மரங்களை வெட்ட இருக்கும் வழிகாட்டு நெறிமுறைகளையும் எடுத்துரைக்க வேண்டும்.
- வட்டாரங்களில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளில் விழிப்புணர்வு முகாம் நடத்துவதை வட்டார அளவிலான தோட்டக்கலை மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உறுதிப்படுத்துவதுடன் மாவட்ட அளவிலான குழுவிடம் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

- மாவட்ட அளவிலான தோட்டக்கலைத் துணை இயக்குநர்கள் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்று ஊடகம் மற்றும் செய்தித்தாள் வாயிலாக இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

<u>ஆ. பனைமரம் வெட்டுவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள்</u>:

- தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பனை மரம் வெட்ட நேரிட்டால் அதற்கு மாவட்ட அளவிலான குழுவின் அனுமதி அவசியமாகும்.
- தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பனை மரம் வெட்டுவதற்கு அனுமதி வேண்டி தனி நபர்/ பொதுத் துறை நிறுவனங்கள் வேளாண்மை-உழவர் நலத்துறையின் "உழவர் செயலியில்" விண்ணப்பிக்க வேண்டும்.
- உழவர் செயலியில் விண்ணப்பித்த பிறகு சம்பந்தப்பட்ட வட்டார அலுவலர்கள் விண்ணப்பத்தினை உழவர் செயலியில் பதிவிறக்கம் செய்ய வேண்டும்.
- வட்டார அளவில் செயல்படும் குழுவானது கூட்டாக வயலாய்வு செய்து விண்ணப்பதாரரின் உண்மைத் தன்மை, பனை மரத்தினை வெட்ட வேண்டியதன் அவசியம் குறித்து ஆராய்ந்து மாவட்ட அளவிலான குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டும்.
- மாவட்ட அளவிலான குழுவின் கூட்டம் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது தேவையின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும்.
- பனை மரங்களை வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பனை மரத்தை வெட்டினால் அதற்கு ஈடாக பத்து பனை மரக் கன்றுகளை (1:10 என்ற விகிதத்தில்) நட்டு வளர்ப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- மாவட்ட அளவிலான குழுவானது வட்டார அளவிலான குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பனை மரத்தினை வெட்டுவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பான முடிவை ஒரு மாதத்திற்குள் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவித்திட வேண்டும். மேலும், மாவட்ட அளவிலான குழுவின் முடிவே இறுதியானது.
- மனுதாரர் பனை மரங்களை உரிய அனுமதி பெற்ற பின்னரே வெட்ட வேண்டும். அவ்வாறு பனை மரங்களை வெட்டும் பொழுது அதனை ஆய்வு செய்ய குழுவில் இடம்பெறும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.
- வெட்டப்பட்ட மரத்தின் பாகங்களை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லும் போது இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் வழங்கப்பட்ட அனுமதி கடிதத்தை காண்பிக்கவேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வ.தட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

பெறுநர்:-
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
செயலாளர்,கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்த்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
கூடுதல் தலைமை செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
கூடுதல் தலைமை செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்-II,
தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு வனம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
வேளாண்மை-உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண். 2595/தோ.க.1(2)/2023.
இருப்புக் கோப்பு/உதிரி.

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

12/09/25

**பிரிவு அலுவலர்**

12/9/25